1992 பிப்ரவரி 5]

காலம்தான் இடையிலே இருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, நிச்சயமாக அது முடிக்கப்பட்டு விடும் என்பதைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 52, திரு. ச. காந்திராஜன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

52—

வேடசந்தூரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர்.

*275—திரு. ச. காந்திராஜன் :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஆத்தூர் அணைக்கட்டு குடிநீர்த் திட்டம் மூலம் வறட்சிப் பகுதியான வேடசந்தூர் நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆத்தூர் அணைக்கட்டிலிருந்து வறட்சிப் பகுதியான வேடசந்தூர் நகர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் ஆய்வில் இல்லை. ஆனால் உலகவங்கி நிதி உதவியுடன் வேடசந்தூர் குடிநீர்த்துணைத் திட்டத்தின் அனைத்து பணிகளும் 11—6—1989-இல் முடிக்கப்பெற்று முழுப்பயனுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது.

திரு. ச. காந்திராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் வறட்சிப் பகுதி என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நிச்சயமாக தெரியும். அந்த அளவிலே தான் அங்கே எதிர்காலத்திலே ஏற்படுகின்ற பிரச்சினைகளையெல்லாம் கருத்திலே கொண்டு அந்தத் திட்டத்தை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருந்தேன். ஆத்தூர் அணைக்கட்டிலேயிருந்து ஏற்கெனவே திண்டுக்கல்லிலே கலெக்டர் அலுவலகம் வரை பைப் லைன் போடப்பட்டு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. எனவே அதற்கு அருகாமையிலே இருக்கிறது என்ற காரணத்தினாலேயும், இந்தத்திட்டத்திற்கு அதிகம் செலவாகாது என்கிற நோக்கத்தோடும் இந்தத்திட்டத்தைப்பற்றி நான் கேட்டிருந்தேன். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டிலாவது அதை கருணை உள்ளத்தோடு பரிசீலிப்பார்களா என்பதை இந்த அவையின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற ஜனத் தொகையை கணக்கில் இட்டு வேடசந்தூர் மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தின்கீழ் குடகனாறு அணையிலிருந்து தண்ணீர் வேண்டுமெனப் பொதுப்பணித்துறையை குடிநீர் வாரியத்தின் அலுவலகத்தின் சார்பாக கோரிக்கை விடுத்திருக்கிறோம். அந்த கோரிக்கைக்கு அனுமதி அளித்தவுடன் அது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 53. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

53—

வைகை ஆற்றில் சாக்கடை நீர் கலத்தல்.

*2253—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடிநீர் பெறப்படும் வைகை ஆற்றில் பரமக்குடி நகராட்சிப் பகுதிகளில் சாக்கடை நீர் கலப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) அதைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம், வந்துள்ளது.

(ஆ) வைகை ஆற்றின் கரையை ஒட்டி 5 கி.மீ. நீளத்திற்கு தடுப்பு சுவர் கட்டுவது குறித்து தமிழ்நாடு குடிநீர் வாரியத்திடம் திட்டம் தயாரிக்க கோரிக்கை விடப்பட்டுள்ளது. அது விரைவில் முடிக்கப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

முற்பகல் 10-20

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி 72,000 ஜனத்தொகையைக் கொண்ட பெரிய நகராட்சியாகும். இந்த 72,000 ஜனத்தொகை மட்டுமின்றி இளையாங்குடி போன்ற நகர்களுக்கும் பரமக்குடி நகராட்சிப் பகுதியிலிருந்துதான் குடிதண்ணீர் பெறப்படுகின்றது. அவ்வாறு இருக்கும்போது ஒப்பன் டிரெய்னேஜ் சரியாக இயங்காத காரணத்தாலும் முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் காமராஜ்